# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

## Tamil Study Centre - Mount Druitt

*Mobile: 0449 892 066*
*Email :mtdruitttsc@gmail.com* *Web : www.mtsc.org.au*

# ஆண்டு 9 – பேச்சுப் போட்டி 2019

பேச்சுப் போட்டி எதிர்வரும் 01.06.2019 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

அனைவருக்கும் என் இனிய வணக்கம் !

**“தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா”** என பல தடவைகள் சொல்வதில் நானும் பெருமையடைகின்றேன். ஏனென்றால் “தேமதுர தமிழ் ஓசை உலகெங்கும் பரவும் வகை செய்தல் வேண்டும்” என்ற பாரதியின் கனவு நனவாகிக் கொண்டிருக்கின்றது. உலகம் முழுவதும் தமிழன் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். அவன் வாழாத நாடுகளில் கூட தமிழ் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆம் அழகு தமிழ் வலம்வரும் நாடுகளை நீங்கள் எத்தனை பேர் அறிவீர்கள்?

ஜப்பானில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் ‘யாதும் ஊரே யாவரும் கேளீர்’ என்ற பாடல் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டு அதன் நுழைவாயிலை அலங்கரிக்கின்றது. நயாகரா நீர்வீழ்ச்சியிலே ‘நல்வரவு’ என்ற வாசகம், தமிழ் மணம் வீசி அதன் புகழ் பரப்புகின்றது.


*கணியன் பூங்குன்றனார்*




**“தமிழன் என்று சொல்லடா
தலை நிமிர்ந்து நில்லடா”**

ஊர் என்பது சுத்தமான தமிழ் சொல். அந்த ஊர் பல நாடுகளின் பெயர்களிலும் ஊர்களிலும் வாழ்கின்றது. தோப்பூர், மூதூர், புத்தூர், நல்லூர் போன்று சிங்கப்பூர், கோலாலம்பூர், மணிப்பூர், ஜெய்ப்பூர் இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

எல்லா மொழிகளிலும் நம் தமிழ் மொழி வாழ்கின்றது. ஆங்கிலத்தில் தான் மிக அதிகமான சொற்கள். அது ஒன்று இரண்டல்ல பன்னிரெண்டாயிரம் (12,000) சொற்களை கண்டுபிடித்திருக்கிறார்கள் மொழியியல் ஆய்வாளர்கள். ஒரு சிறு உதாரணத்தை மட்டும் நான் தெரிவிக்க விரும்புகின்றேன். மனிதன் என்ற ஆங்கில எழுத்துக்களில் முதல் மூன்று எழுத்துக்கள் எம், ஏ, என். மேன். அதாவது மனிதன் உள்ளடங்கியிருக்கின்றான். மனிதன் தான் Man ஆகிவிட்டது. அரிசி தான் Rice ஆனது. இன்னும் எத்தனை எத்தனையோ ...........?

ஜப்பான், கொரிய மொழிகளில் கூட பல நூறு தமிழ்ச் சொற்கள். இதில் வியப்பதற்கு எதுவுமில்லை. ஏனென்றால் அனைத்து மொழிகளுக்கும் அன்னை மொழி தமிழ் தானே.

எனவே **“தமிழன் என்று சொல்லடா**

**தலை நிமிர்ந்து நில்லடா”**

நன்றி,

வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திரு. சாமித்தம்பி கனகசிங்கம்.